# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/36 - 2016 මාර්තු මස 30 වැනි බදාදා - 2016.03.30

*1960/36 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 63/51* (II).

**இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்தொகுதியினர்**
**தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டம்**

*(284 ஆம் அத்தியாயமான) புகையிரத சேவை சீருடைப் பணியாட்தொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ், இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்தொகுதியினர் தண்ணளி நிதியமென அறியப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்டவையும், நிதியமைச்சருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அவரினால் உறுதிப்படுத்தப்பட்டவையுமான விதிகள்.*

செயலாளர் (பதில்),
*நிதியமைச்சு.*

கொழும்பு,
*2016, சனவரி 30.*

**விதிகள்**

*1984 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதிய 305 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும், 2013, ஒற்றோபர் 24 ஆந் திகதிய 1833/26 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான விதிகள் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-*

*1. 5 ஆம் விதியின் 1 ஆம் பந்தியில், "நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.*

*2. (15) ஆம் விதியில் -*

*(அ) 1 ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில், "ரூபா இருபதாயிரம் (ரூபா 20,000)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ரூபா முப்பதாயிரம் (ரூபா 30,000)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்*

*(ஆ) 5 ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில், "பத்து சதவீதமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு சதவீதமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.*

3. 19 ஆம் விதியின் 8 ஆம் பந்தியில், "பத்து சதவீதமானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு சதவீதமானது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

4. (21) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியை இடுவதன் மூலமும் :-

"விழாக் கடன்கள். 21. (1) (அ) உறுப்பினராக ஓராண்டுக்காலப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ளவரும் விழாக் கடனொன்றைப் பெறுவதற்கு விரும்புகின்றவருமான எவரேனும் உறுப்பினர், ஆண்டொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாவான (ரூபா 10,000) அத்தகைய கடனுக்கு உரித்துடையவராதல் வேண்டும். சொல்லப்பட்ட விழாக் கடனைப் பெற்றுள்ள எவரேனும் உறுப்பினர், ஆயிரத்து இருநூறு ரூபாவான (ரூபா 1,200) பத்து மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் இருபது சதவீத (20%) வட்டியுடன் சேர்த்து அத்தகைய தொகையைக் கொடுத்துத்தீர்த்தல் வேண்டும் ;

(ஆ) உறுப்பினரெவரும், அவரினால் பெறப்பட்ட ஏதேனும் முன்னைய விழாக்கடன் ஏதேனுமிருப்பின் அது அத்தகைய உறுப்பினரினால் முழுமையாகக் கொடுத்துத்தீர்க்கப்படும் வரை, விழாக் கடனொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

நிவாரணக் கடன். 21. (2) (அ) உறுப்பினராக ஓராண்டுக்காலப் பகுதியைப் பூர்த்தி செய்துள்ள எவரேனும் உறுப்பினர், பின்வரும் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறு அவரது உறுப்பாண்மை ஆண்டுகளின் எண்ணிக்கைக்கு நேரொத்ததாகவுள்ள அத்தகைய தொகையினதான நிவாரணக் கடனொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும் :-

**அட்டவணை**

| இல. | உறுப்பாண்மையின் காலப்பகுதி (ஆண்டுகளில்) | கடன்தொகை (ரூபாக்களில் ) |
|---|---|---|
| 1. | 01- 10 | 3,500 |
| 2. | 10க்கு மேற்பட்ட | 5,000 |

(ஆ) உறுப்பினராக ஓராண்டுக்காலப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ளவரும் ஆனால் பத்தாண்டுக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்திராதவருமான எவரேனும் உறுப்பினர், மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவான (ரூபா 3,500) நிவாரணக் கடனுக்கு உரித்துடையவராதல் வேண்டும். உறுப்பினராகப் பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்துள்ள எவரேனும் உறுப்பினர் நிவாரணக் கடனாக ஐயாயிரம் ரூபாவுக்கு (ரூபா 5,000) உரித்துடையவராதல் வேண்டும்.

(இ) இவ்விதியின் கீழ் வழங்கப்பட்ட நிவாரணக் கடனொன்று, பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆறு மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் அல்லது பன்னிரெண்டு மாதாந்தத் தவணைக் கட்டணங்களில், அதன்மீது பதினாறு சதவீத (16%) வட்டியுடன், அறவிடப்படுதல் வேண்டும்:-

**அட்டவணை**

| இல. | கடன் தொகை (ரூபாக் களில்) | ஆறு மாதங்களில் (நான்கு தவணைக் கட்டணங்கள்) ரூபா | வட்டி (16 சத வீதப்படி) ரூபா | பன்னிரெண்டு மாதங்கள் (பத்துத் தவணைக் கட்டணங்கள்) ரூபா | வட்டி (16 சத வீதப்படி) ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | 3,500 | 875 | 70 | 350 | 56 |
| 2. | 5,000 | 1250 | 100 | 500 | 80 |

(ஈ) உறுப்பினரெவரும், அவரினால் முன்னர் பெறப்பட்ட ஏதேனும் நிவாரணக்கடன் ஏதேனுமிருப்பின் அது அத்தகைய உறுப்பினரினால் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்படும்வரை நிவாரணக் கடனொன்றுக்கு உரித்துடையவராதலாகாது.

21. (3) அத்தகைய கடனுக்கான ஏதேனும் விண்ணப்பம், அத்தகைய நோக்கத்துக்காக கூட்டுத்தாபன அலுவலகத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்தொகுதியினர் தண்ணளி நிதியத்தின் செயலாளருக்கும் பொருளாளருக்கும் விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினரின் பற்றுவரவேட்டுடனும் கடன் விண்ணப்பம் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்களுடனும் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

21. (4) விண்ணப்பப்படிவத்தின் பின்புறத்தில் அச்சிடப்பட்ட ஒப்புறுதிப்படிவம் நிரப்பப்பட்டு, இரு சாட்சிகள் கையொப்பங்களுடன் சேர்த்து, விதிக்கப்பட்ட பெறுமதியைக் கொண்ட செல்லுபடியான முத்திரையின் மீது கையொப்பமிடப்படுதல் வேண்டும். காசோலைகளைக் கையொப்பமிடும் கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள் அத்தகைய ஏதேனும் கடன் விண்ணப்பத்தைச் சாட்சிப்படுத்துவதற்கு உரித்துடையோராதலாகாது.

21. (5) எக்கடன் தொகைக்காக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அத்தொகைக்கான அல்லது செலுத்தற்படற்பாலதான தொகைக்கான காசோலையொன்று, பற்றுகளும் வரவுகளும் பற்றிய விபரங்கள் பதியப்படும் பற்றுவரவேட்டுடன் சேர்த்து, முறையாக நிரப்பப்பட்ட கடன் விண்ணப்பமும் பற்றுச்சீட்டும் பெறப்பட்டதன் மேல் மூன்று நாட்களினுள் உறுப்பினருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

21. (6) உறுப்பினர், காசோலையையும் பற்றுவரவேட்டையும் பெற்றதன்மேல் அதன்கண்ணுள்ள பதிவுகளைச் செவ்வைபார்த்து எவையேனும் பிழையான பதிவுகள் கண்டுபிடிக்கப்படின், செயலாளருக்கும் பொருளாளருக்கும் எழுத்தில் உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிழையான பதிவை நிவர்த்தி செய்வித்தலும் வேண்டும். உறுப்பினர் எவையேனும் பதிவுகளைச் செய்தல் அல்லது அதன்கண் ஏலவே செய்யப்பட்ட எவையேனும் பதிவுகளை எம்முறையிலேனும் மாற்றுதல் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், முகாமைக்குழு, கண்டுபிடிக்கப்படின், உறுப்பாண்மையிலிருந்து அத்தகைய உறுப்பினரை நிறுத்துவதற்கு, இடைநிறுத்துவதற்கு அல்லது விலக்குவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அதனைத் திணைக்களத்துக்கு அறிக்கையிடுவதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும்.".

5. (22) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இடுவதன்மூலமும் :-

"விசேட கடன்கள்.

22. (1) ஓராண்டு உறுப்பாண்மைக் காலப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ள எவரேனும் உறுப்பினர், பின்வரும் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறு அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதிக்கு நேரொத்ததாகவுள்ள அத்தகைய தொகையினதான விசேட கடனுக்கு உரித்துடையதாதல் வேண்டும் :-

**அட்டவணை**

| இல. | உறுப்பாண்மையின் காலப்பகுதி (ஆண்டுகளில்) | கடன்தொகை (ரூபாக்களில் ) |
|---|---|---|
| 1. | 01- 03 | 10,000 |
| 2. | 03-05 | 20,000 |
| 3. | 05-10 | 30,000 |
| 4. | 10-15 | 40,000 |
| 5. | 15-20 | 60,000 |
| 6. | 20க்கு மேற்பட்ட | 80,000 |

22. (2) இவ்விதியின் கீழ் விசேட கடனுக்காக விண்ணப்பிக்கின்ற எவரேனும் உறுப்பினர்–

(அ) ஐம்பத்தேழு வயதுக்கு மேற்பட்டவராகவிருத்தலாகாது ;

(ஆ) கூட்டுத்தாபன அலுவலகத்திடமிருந்து பெறப்படவேண்டியவொரு விசேட படிவத்தில் விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பப்படிவத்தில் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களையும் வழங்குதல் வேண்டும் ;

(ஈ) முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பத்தைக் கூட்டுத்தாபனத்தின் செயலாளருக்கும் பொருளாளருக்கும் கையளித்தல் வேண்டும்.

*22. (3)* (22) ஆம் விதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் கடனொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராகவிராத எவரேனும் உறுப்பினருக்கு, முகாமைக் குழுவின் எழுத்திலான அங்கீகாரத்துக்கமைய, அவர் ஓய்வுபெறும் திகதியில் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டிய நாற்பதாயிரம் ரூபாவான (ரூபா 40,000/-) விசேட கடனொன்று வழங்கப்படலாம். இது தொடர்பாக முகாமைக் குழுவின் முடிவு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

*22. (4)* விசேட கடன் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிணை முறியை ஒவ்வொர் உறுப்பினரும் முறையாக நிரப்புதல் வேண்டுமென்பதுடன், பிணைமுறியில் குறித்துரைக்கப்பட்டவாறு இக்கடனை முறையாகத் தவணைக்கட்டணங்களில் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பொறுப்பேற்றலும் வேண்டும். எவரேனும் உறுப்பினர் கடன் தவணைக்கட்டணக் கொடுப்பனவுகளில் தவணை தவறுமிடத்து, அவ்வாறு தவணை தவறப்பட்ட தவணைக்கட்டணத்துக்குச் சமமான ரூபாத் தொகையை, அதன் தீர்மான வட்டியுடன் சேர்த்து, அத்தகைய உறுப்பினரின் சம்பளத்திலிருந்து கழிப்பதன் மூலம் அத்தகைய தவணைக்கட்டணங்களை அறவிடுவதற்கு இவ்விதியின் கீழ் கூட்டுத்தாபனம் தத்துவமுடையாதல் வேண்டும்.

*22. (5)* 8 ஆம் விதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் எவரேனும் உறுப்பினரின் உறுப்பாண்மை இடைநிறுத்தப்படுமிடத்து, அத்தகைய உறுப்பினர் பிணைமுறியில் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடைநிறுத்தல் திகதியிலிருந்து தொடர்ச்சியான மூன்று மாதங்களினுள், அவரது வைப்புக்கள், பணிக்கொடை அல்லது வேறேதேனும் உரித்துடைமைக்கெதிராக விசேட கடனின் நிலுவையாகவுள்ள தொகையை எதிரீடு செய்வதற்கு அவரது சம்மதத்தை அளித்தலும் வேண்டும்.

*22. (6)* செயலாளரும் பொருளாளரும், இவ்விதியின் கீழ் விசேட கடனுக்காக விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல், விண்ணப்பக்காரரின் முன்னிலையில் அவ்விண்ணப்பத்தில் திகதி முத்திரையையிடுதல் வேண்டுமென்பதுடன், தொடரிலக்கத்துடனான பற்றுச்சீட்டொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

*22. (7)* கூட்டுத்தாபனம் இவ்விதியின் கீழான கடனை, விண்ணப்பத்தின் தொடரிலக்க ஒழுங்குவரிசைப்படியும் நிதிகள் கிடைக்கக்கூடியமையின் மீதும் எவரேனும் உறுப்பினருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*22. (8)* இவ்விதியின் கீழ் எவரேனும் உறுப்பினருக்கு வழங்கப்பட்ட விசேட கடன், பின்வரும் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் தவணைக் கட்டணங்கள் என்ற வகையாக 6, 12, 18, 24 அல்லது 36 மாதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர், இவ்விதியின் கீழ் பெறப்பட்ட கடன் முழுமையாகக் கொடுத்துத்தீர்க்கப்படும் வரை இவ்விதியின் கீழ் மற்றுமொரு கடனுக்கு உரித்துடையவராதலாகாது.

**அட்டவணை** (தொடர்ச்சி)

| இல. | கடன் தொகை ரூபா | ஆறு மாதங்களில் (4 தவணைக் கட்டணங்கள்) ரூபா | வட்டி (16 சத வீதத்தில்) ரூபா | பன்னிரெண்டு மாதங்களில் (10 தவணைக் கட்டணங்கள்) ரூபா | வட்டி (16 சத வீதத்தில்) ரூபா | பதினெட்டு மாதங்களில் (16 தவணைக் கட்டணங்கள்) ரூபா | வட்டி (16 சத வீதத்தில்) ரூபா | இருபத்திநான்கு மாதங்களில் (22 தவணைக் கட்டணங்கள்) | வட்டி (16 சத வீதத்தில்) ரூபா | முப்பத்தாறு மாதங் (36 தவணைக் கட்டணங்கள் | வட்டி (16 சத வீதத்தில்) ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10,000 | 2,500 | 200 | 1,000 | 160 | 625 | 150 | 550X1<br>450X21 | 145 | | |
| 2 | 20,000 | 5,000 | 400 | 2,000 | 320 | 1,250 | 300 | 1100X1<br>900X21 | 291 | 530X1<br>590X33 | 282 |
| 3 | 30,000 | 7,500 | 600 | 3,000 | 480 | 1,875 | 450 | 1335X1<br>1365X21 | 436 | 960X1<br>880X33 | 423 |
| 4 | 40,000 | 10,000 | 800 | 4,000 | 640 | 2,500 | 600 | 1780X1<br>1820X21 | 581 | 1060X1<br>1180X33 | 564 |
| 5 | 60,000 | 15,000 | 1200 | 6,000 | 960 | 3,750 | 900 | 2670X1<br>2730X21 | 872 | 1755X1<br>1765X33 | 847 |
| 6 | 80,000 | 20,000 | 1600 | 8,000 | 1280 | 5,000 | 1200 | 3665X1<br>3635X21 | 1163 | 2450X1<br>2350X33 | 1129 |

6. (23) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இடுவதன்மூலமும்:-

"விசேட கடன்களை அறவிடுதல்.

23. (1) இவ்விதியின் கீழ் வழங்கப்பட்ட விசேட கடன் எந்த எண்ணிக்கையினவான தவணைக்கட்டணங்களில் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டுமோ அந்தத் தவணைக்கட்டணங்களில் எண்ணிக்கை, (22) ஆம் விதியின் (5) ஆம் பந்திக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கையை விஞ்சுதலாகாது.

ஆயின், (22) ஆம் விதியின் (5) ஆம் பந்திக்கான அட்டவணையின்படி அத்தகைய உறுப்பினரினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான காலப்பகுதிக்கு முன்னர் கடனை முழுமையாகக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தமது விருப்பத்தைச் சுட்டிக்காட்டியுள்ள எவரேனும் உறுப்பினரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், செயலாளர், பொருளாளருடன் சேர்ந்து தவணைக்கட்டணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்; எவ்வாறாயினும், எப்பட்சத்திலும், தவணைக்கட்டணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதலாகாது. ஓர் உறுப்பினர் ஏதேனும் கடன் தவணைக்கட்டணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து, எஞ்சியுள்ள தவணைக் கட்டணங்களின் மீது மூன்று சதவீத (3%) வட்டி தண்டமாக அறவிடப்படுதல் வேண்டும்.

நிலுவைகள்.

23. (2) (அ) புகையிரதத் திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது நியதிச் சட்டமுறையான சபையில் தொழிலிலுள்ள அல்லது அவற்றிலிருந்து பதவி நீக்கப்பட்ட உறுப்பினரிடமிருந்து எவையேனும் நிலுவைகள் திரட்டு நிதியத்துக்கு வருமதியாகவுள்ள பட்சத்தில், சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர், (6) ஆம் விதியின் (1) ஆம், (2) ஆம் பந்திகளின் நியதிகளின்படி திரட்டு நிதியத்தின் செயலாளரினாலும் பொருளாளரினாலும் எழுத்திலான வேண்டுகோளொன்று செய்யப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர்களுக்கு அந்த உறுப்பினரிடமிருந்து வருமதியான எவையேனும் பணங்களிலிருந்து அத்தகைய எல்லா நிலுவைகளையும் அறவிடுவதற்கு இவ்விதியின் நியதிகளின்படி தத்துவமுடையோராதல் வேண்டும் ;

(ஆ) சொல்லப்பட்ட திணைக்களத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அத்தகைய உறுப்பினரின் வரவுக்குப் பணமெதுவும் இல்லாதிருப்பின், கூட்டுத்தாபனம் சட்ட நடவடிக்கை மூலம் அத்தொகையை அறவிடுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.".

7. (25) ஆம் விதியில், "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500) விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஐயாயிரம் ரூபாவை (ரூபா 5,000) விஞ்சாத" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

8. (26) ஆம் விதியின் (ஆ) என்னும் பந்தியில், "பத்து சதவீதமும் (10%) " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆறு சதவீதமும் (6%)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

9. (33) ஆம் விதியில், (10) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய (11)ஆம் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"33. (11) முகாமைக்குழு உறுப்பினர்கள் பத்தாயிரம் ரூபாவை (ரூபா 10,000) இடர்பாட்டுக் கடனைக் பெறுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும் ; இது, அத்தகைய உறுப்பினர்களினால் ஆயிரத்து இருநூறு ரூபாவான (ரூபா 1,200) பத்து மாதாந்தத் தவணைக்கட்டணங்களில், இருபது சதவீதத்தில் (20%) அதன் மீதான வட்டியுடன் சேர்த்து, கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும். முகாமைக் குழுவின் எவரேனும் உறுப்பினர் கடன் தவணைக் கட்டணங்களைக் கொடுப்பனவு செய்வதில் தவணைதவறுமிடத்து, அவ்வாறு தவணை தவறப்பட தவணைக் கட்டணத்துக்குச் சமமான ரூபாக்களிலான பணத்தொகையை, அதன்மீதான வட்டியுடன் சேர்த்து அத்தகைய உறுப்பினரின் சம்பளத்திலிருந்து கழிப்பதன் மூலம் அத்தகைய தவணைக்கட்டணங்களை அறவிடுவதற்குக் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.".

10. (39) ஆம் விதியில், அதன் (1) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"தலைவரின் மிகையூதியமும் குழுவின் பயணச் செலவுகளும்.

39. (1) குழுவின் பயணச் செலவுகளுடன் சேர்த்து மேலதிகமாக, கூட்டுத்தாபனத்தின் தலைவர் மட்டுமே தலைவராக அவரது பதவிக்காலத்தின்போது, மாதமொன்றுக்கான அவரது அடிப்படைச் சம்பளத்தின் இருபத்தைந்து சதவீத (25%) மிகையூதியத்தை, அதற்கான அங்கீகாரத்தை ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பெற்ற பின்னர் பெறுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய மிகையூதியத்தொகை ஐயாயிரம் ரூபாவை (ரூபா 5,000) விஞ்சுதலாகாதென்பதுடன், இப்படி தவிர்ந்த வேறேதேனும் படிக்கு அவர் உரித்துடையவராதலுமாகாது.".

4- 643

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.